## சித்தப்பா தோழர் கே.ஆர். பாஷியம்
**(மறைவுற்ற போது எழுதியது)**

# சோசலீஷ கீதம்
இசைக்க வந்த, சுதந்திரப் புறாவே!
இம்மாந்தரைத் திருத்த இயலாது எனப்,
பறந்து போனாயோ?

காந்தி காந்தி என்பாயே!,
அதனால்தான்,
அவர் பிரிந்த நாளை நீயும்,
தேர்ந்தெடுத்தாயோ?

# உன் சொந்த ஊரில்,
நின் தொண்டரும் தோழரும்,
தடுத்திடுவார் என்றெண்ணி,
காலதேவன் சென்னைக் கழைத்து,
உன்னைப் பிரிதானோ?

# நீ கரடு முரடான பாதைகளிலேயே
கடந்து வந்தவன்!
வேறு சில செப்பனிட்டப் பாதைகளை,
பிறர் காட்டியபோது,
அது நீங்கள் செய்தது,
இயற்கையுடன் இயைந்து செல்வேன் என,
தனிப் பாதையில் புறப்பட்டவன் நீ!

# பொருளாதாரத்தைத்
திறம்பட புரிந்தவன்,
பொருளின் ஆதாயத்தைப்
புரியாமல் விட்டாயோ?

அதனால், பலர் உன்னைப்
புரிந்து கொள்ளாமல்,
விட்டு விட்டார்கள்!

காலத்தின் கோலத்தில்,
உன்னைப் புரிந்து கொள்ள,
மறுத்தும் விட்டார்கள்!

# நீ இராமன் காலத்தில்,
வாழ்ந்திருக்க வேண்டியவன்!
அங்கேதான் நீதியும் நேர்மையும்,
அன்பும் தேசபக்தியும்,
நிறைந்திருந்ததாய்ச் சொல்கிறார்கள்!

# இந்த சுயநல ராஜ்ஜியத்தில்,
உன் தேசபக்தி, கேலிக்கிரையானது!
பத்தம்பசலித் தனமானவன் என,
முத்திரைக் குத்தி விட்டார்கள்!

# காரல் மார்க்ஸ், லெனின் கண்ட,
தத்துவத்தின், கரைகண்ட மாமணியே,
அந்த அருவியையே தரிசித்துக்
கொண்டிருந்ததால்,
அருகிலிருந்த பணமென்னும்,
காட்டாற்றை காண மறந்தனையோ?

இந்த வெள்ளத்தில், முங்கிக் குளிப்பதை;
முழுச் சுகம் என்றவர்கள்,
உன்னை அறியாதவன் என்று,
அனுதாபப் பட்டார்கள்!

# அந்த அருவியிலே கொள்ளும் சுகம்,
எந்நாளும் நிலைத்திருக்கும் என,
நீ இயம்பியதைக் கேட்டு,
பயித்தியக் காரன் என்றார்கள்!

# நீ பாதை மாறாமல்,
பயணம் செய்த போதும் உன்னைப்,
பயித்தியக் காரன் என்றே பறைசாற்றினர்!

சோஷலீசக் காற்றைச் சுதந்திர நாட்டில்,
விரவ நினைத்த உன்னை,
கோடாலிக் காம்பு என்றார்கள்!

# நீ புகட்டிய,
மார்க்சிசமும் பாரதி பாடல்களும்,
என் எண்ணங்களில் எல்லாம்,
உலவிக் கொண்டுதானிருக்கின்றன!

# உன்னுடன் அளவளாவிய,
அந்த மணித்துளிகளில்
சொன்ன கருத்துக்கள்;
ஆழியில் கடைந்த முத்துக்கள்!

இன்னும் சொல்கிறேன் என்றாயே,
இனி எப்போது வந்து சொல்லப் போகிறாய்?

# பாரதி உனக்குப் பிரியமானவன்
என்பதினாலோ,
பலநூறுபேர் தொடராமல்,
சென்னை வந்து,
உன் இறுதி யாத்திரையை,
ஏழெட்டுப் பேர்களுடன்,
முடித்துக் கொண்டாய்?

# கொள்கை பிறழாதவனே!
கட்சியின் போக்கில் மாற்றம் கண்டு,
கொள்கைக்காக வெளியேறி,
பிழைக்கத் தெரியாதவன் என,

பெயரெடுத்தவன் அல்லவா நீ!

பொருளையும், பதவியையும்,
மையமாகக் கொண்ட இவ்வுலகில்,
அறிவைக் கருவாய் கொண்ட உன்,
வார்த்தைகளை,
வாழத் தெரியாதவன்,
வார்த்தைகளாக்கினர்!

# இல்லற வாழ்க்கையில்,
மாயத்தோணி அறியாமல்,
உண்மைத் தோணி தேடி,
கரையேறத் தெரியாமல் போனவன் நீ!

உனது தேச பக்தியும், சோஷலிச ஞானமும்,
மாயத் தோணியை அழித்து விட்டன!

# உன்னைப் பற்றி; பிறறைப் போல்,
தவறாக எண்ணியவன் சில ஆண்டுகள் முன்
சரியாகப் புரிந்து கொண்டேன்;
நீ நரியன்று,
மருண்டு நிற்கும் மானென்று!

# உன் வாழ்க்கைப் பாதையை,
விளக்கிச் சொல்ல,
நான் முதிர்ச்சி அடையவில்லை என்றாயே!
இனி,
எப்போது சொல்லப் போகிறாய்?

# உன்னைப் பற்றி விளங்கிக் கொண்டவன்,
நான் ஒருவன்தான் எனக் கொண்டாயே
திருப்தி; அது, நான் பெற்ற பேறு!

# நின் பெயரைப் போல்,
நல் கருத்துக்களுக்கு,
உரையாகவும் உறைவிடமாகவும்,
ஆனவன் அல்லவா நீ!

நின் கருத்துக்களை,
நான் மறுத்திருக்கலாம்,
வெறுத்திருக்கலாம்;
அஃது அறியாமையின் நிலையே!

# இளமை முதல்,
சுகமான பக்கங்களைப் புறக்கணித்து,
கடினப் பாறைகளைச் சுமந்தவனே!
என் அறியாமைகளைப்
பொறுத்துக் கொள்ளலாம்;
ஏனெனில் நீ, என்னைவிட,
எல்லாவற்றிலும் பெரியவன்!

# கண்ணன் சொன்னது போல்,
கர்மாவென்று மறவாமல்,
கடைநாள் வரை (இயலாமையிலும்) நீ,
தமையன் பணி செய்தது கேட்டு,
நெஞ்சம் சிலிர்க்கிறது!

# வாழ்க்கையில் நீ,
வீண் பொழுதுகளே போக்காதவன்!
ஆகலின், நின் பணிகள் முடிந்திருக்குமென,
காலதேவன்,
கணக்கை முடித்து விட்டானோ?

# உனக்காக, ஆனந்த பள்ளு,
பாட வேண்டிய என்னை,
இறைவன்,
அஞ்சலி பாட வைத்து விட்டானே!
என்செய்வேன்?

- **கு. ப. அசோகன், (பிப்ரவரி 1985)**

அறிவுளார் அணைந்து போற்றும்
        அருந்தமிழ் வேந்தன் மாமன்,
செறிந்த நல் கருத்து யாவும்,
        செவ்வனே போற்றி வந்து,
நிறைதுயர் கொண்ட மக்கள்,
        நெஞ்சிலே நிறைந்து நின்று,
மறைபொருள் விளக்கம் யாவும்,
        மனதிலே விளங்கிக் கொண்டு,
கறையிலா வாழ்க்கைக் கொண்டு,
        கடும்பிணி கண்ட கற்பகத் தருவே!
குறைவிலாச் செங்கண் மால்,
        கொள்வான் உனை ஏந்தி!

- **கு.ப. அசோகன்**